தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 9 செப்டம்பர் – 2014 ₹1.00

## சுதந்திர தின விழா



இந்தியக் குடியரசின் 68ஆவது சுதந்திர தினம், பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளில் 15.08.2014அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பல்கலைக்கழகத் தலைமை நிலைய வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்துப் பேருரை ஆற்றினார். நிகழ்ச்சியில் துணைவேந்தர் அவர்கள் 25 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு கிஸான் விகாஸ் பத்திரம் வழங்கிச் சிறப்புச் செய்தார். இதில் பல்கலைக்கழகப் பணியாளர்களும், மாணவர்களும் பங்கேற்றனர். மேலும், துணைவேந்தர் அவர்கள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார். நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர்களும், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் இயக்குநர் ஆகியோரும் தத்தம் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். மேலும், சென்னை மற்றும் நாமக்கல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினர் சுதந்திர தின அணிவகுப்பு நடத்தினர்.

## முதுநிலைப் பட்டயப் படிப்புகளுக்கான புத்தாக்கப் பயிற்சி

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் இணையதள வழியில் அளிக்கப்படும் தொலைநிலைக் கல்வி முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் நான்காவது புத்தாக்கப் பயிற்சி, 27.08.2014அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் பங்கேற்பாளர்களை வரவேற்று, முதுநிலைப் பட்டயப் படிப்புகள், அவற்றின் விதிகள் மற்றும் விதிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் ஆகியோர் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் குறித்து விளக்கியுரைத்தனர். பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் தொலைநிலைக் கல்வி வழியிலான படிப்புகள் குறித்து உரையாற்றினார். பெங்களூர், ஆயுர்வேதா மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவ நிலையத்தின் இயக்குநர் முனைவர் எம்.என். பாலகிருஷ்ணன் நாயர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார். தொலைநிலைக்



கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் பயிற்சி இயக்குநர்கள்/ பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள்/பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடலைத் துவக்கிவைத்தார். மேலும், இந்தக் கல்வியாண்டு 2014–2015இல் நடத்தப்பெறும் 21 முதுநிலைப் பட்டயப் படிப்புகளில் தமிழ்நாடு (77), கேரளா (33), கர்நாடகா(13), ஆந்திரப் பிரதேசம் (10), மகாராஷ்டிரா(8), ஒரிசா(3), உத்திரப் பிரதேசம்(3), பீகார்(1), பஞ்சாப்(1), ஜம்மு காஷ்மீர்(1), புதுச்சேரி(1), அந்தமான் மற்றும் நிகோபார்(1) தீவுகளைச் சார்ந்த மொத்தம் 152 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

## குடும்பப் பண்ணையம்மூலம் நிலையான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு குறித்த பயிலரங்கு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு, பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் “குடும்பப் பண்ணையம்மூலம் நிலையான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு” குறித்த பயிலரங்கு, மதுரையில் 01.08.2014 மற்றும் 02.08.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் பயிலரங்கில் பங்கேற்ற சிறப்பு



அழைப்பாளர்கள் மற்றும் விவசாயிகளை வரவேற்றார். மதுரை மாவட்ட ஆட்சியர் டாக்டர் எல். சுப்பிரமணியன் அவர்கள் விழாவில் பங்கேற்று, குத்து விளக்கேற்றிப் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். மேலும், பண்ணையாளர்களின் வெற்றிக் கதைகள் அடங்கிய ''பண்ணையாளர்களின் வெற்றிக்கதை குறுந்தகடு'' என்ற வீடியோ பாடத்தை வெளியிட்டுத் துவக்கவுரை ஆற்றினார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் ''கறவைமாடுகளில் செயற்கை முறைக் கருவூட்டல்'' என்ற புத்தகத்தை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர்(பொ.) முனைவர் சி. சின்னுசாமி அவர்கள் பயிலரங்கக் கையேடு வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். சென்னை அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர் திரு. கே. சுப்பிரமணியன் அவர்கள் ''கறவைமாடு வளர்ப்பில் நவீனத் தொழில்நுட்பங்கள்'' என்ற புத்தகத்தை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். பயிலரங்கில் மதுரை நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கிளை மேலாளர் திரு. கே. நாராயணன், கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் டாக்டர் ஆர். கோபிநாத், கனரா வங்கி மேலாளர் திரு. ஆர். முருகபிரபு, நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. ஆர். சங்கர நாராயணன், யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் மண்டல மேலாளர் திரு. ஆர். புல்லராவ் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப. முருகானந்தம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பயிலரங்கின் துவக்க விழாவிற்குப் பின், மதுரை மாவட்ட ஆட்சியர் டாக்டர் எல். சுப்பிரமணியன் அவர்கள், 30க்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் இடம்பெற்ற கண்காட்சியைத் துவக்கிவைத்தார். புதிய தொழில்நுட்பங்கள், பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட புதிய கோழி மற்றும் வான்கோழி இனங்கள், மதிப்புக் கூட்டிய பொருட்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டன. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கல்லூரி மாணவர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## பெலிசிட்டாஸ்'14

பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டை யொட்டிக் கல்லூரிகளுக்கான கலை விழா ''பெலிசிட்டாஸ்'14: வெட்பெஸ்ட்'' 23.08.2014 மற்றும் 24.08.2014ஆம் தேதிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பெற்றது. விருதுபெற்ற திரைப்படத் தொகுப்பாளர் திரு. அக்கிநேனி ஸ்ரீகர் பிரசாத் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். தமிழ்நாடு, இந்தியக் குழந்தைகள் நலக் கழகத்தின் பொதுச் செயலர் திருமதி சந்திராதேவி தணிகாசலம் அவர்கள் குழந்தைகள் நலன் குறித்த விழிப்புணர்வுப் பேரணியைத் துவக்கிவைத்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் மாணவர் கூட்டமைப்புத் துணைத் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவில் நடத்தப்பெற்ற பல்வேறு கலை இலக்கியப் போட்டிகளில் 70 கல்லூரிகளைச் சார்ந்த 635 மாணவர்கள் பங்கேற்றனர்.



## கல்விநிலையப் பணி

### சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி

### மாட்டின இளம்கரு பரிமாற்றத் தொழில்நுட்பம்



கல்லூரியின் கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறைமூலம் தமிழ்நாடு அரசின் கால்நடை மேம்பாட்டு முகமையின் நிதியுதவியுடன் ''மாட்டின இளம்கரு பரிமாற்றத் தொழில்நுட்பம்'' குறித்த பயிலரங்கு 19.08.2014முதல் 28.08.2014வரை கல்லூரியில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்

துறையிலிருந்து 10 களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர். 28.08.2014அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### சோதனைக்குழாய்க் கருவுறுதலும் இளம்கரு வளர்ப்பும் பற்றிய பயிற்சி



கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறையின் மைய இளங்கரு உயிர்த்தொழில்நுட்பப் பிரிவுமூலம் “சோதனைக்குழாய்க் கருவுறுதலும் இளங்கரு வளர்ப்பும்” பற்றிய மாநில அளவிலான பயிற்சி 01.08.2014முதல் 21.08.2014வரை நடத்தப்பட்டது. ஆறு மருத்துவர்கள் உட்பட மொத்தம் 15 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். 21.08.2014அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் சிகிச்சையியல் இயக்குநர் மற்றும் முதல்வர்(பொ.) முனைவர் சொ.ரா. சீனிவாசன் அவர்கள் வாழ்த்துரை நல்கி, சான்றிதழ் வழங்கினார். கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. பழனிசாமி அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சி

பல்கலைக்கழக வெள்ளிவிழாவை நினைவு கூறும் வகையில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஆதாரச்செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருத்துவ மையம் 12.08.2014 அன்று “உயர்நிலை ஆதாரச் செல் தொழில்நுட்பங்கள்” குறித்த ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. நிகழ்ச்சியில் ஸ்டெம்செல் தொழில்நுட்பங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. ஆதாரச்செல் துறையில் பயன்படுத்தப்படும் பல்வேறு உபகரணங்களின் தொகுப்பு லாபமேட் ஆசியா தனியார் நிறுவனத்தின் உதவியுடன் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது.

### முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு ஊக்கமூட்டல் பயிற்சி

- முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு ஊக்கமூட்டல் தொழில்முனைவோர் பயிற்சி – “இன்ஸ்பையர்” என்ற தலைப்பில் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறைமூலம் 26.08.2014 மற்றும் 27.08.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. தனியார் துறைசார்ந்த பயிற்றுநர் மற்றும் கால்நடை மருத்துவர்களின் அனுபவப் பகிர்வு உள்ளிட்ட தொடர் விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையிலிருந்து விலகி, மிகப் பெரிய அளவில் ஆட்டுப் பண்ணை நடத்திவரும் நமது பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு உறுப்பினராக உள்ள டாக்டர் விஷ்ணு வர்தன ராவ் அவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் நிறைவுரை ஆற்றி, 48 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- கால்நடை மருத்துவராக இருந்து இந்திய ஆட்சிப் பணிக்கு வந்த சத்தீஸ்கர், சமூக நலத் துறை இயக்குநர் டாக்டர் சி.ஆர் பிரசன்னா அவர்கள் 11.08.2014அன்று



இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குத் தயாராவது எப்படி மற்றும் பாடம் தேர்வுசெய்தல், படித்தல் முறைகள், தன்னம்பிக்கையை மேம்படுத்திக்கொள்ளல் ஆகியவை குறித்து விளக்கமாக எடுத்துக்கூறி, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

### இறைச்சித் தொழில்நுட்பக் கண்காட்சி –2014

கல்லூரியின் இறைச்சி அறிவியல் தொழில்நுட்பத் துறை பெங்களூர், சர்வதேசக் கண்காட்சி மையத்தில் 22.08.2014முதல் 24.08.2014வரை நடைபெற்ற இறைச்சித் தொழில்நுட்பக் கண்காட்சி– 2014இல் பங்கேற்றது. இதில் நடமாடும் கோழி பதப்படுத்தல், கோழியிறைச்சிக் கூடக் கழிவுகளைப் பயன்படுத்தல் உள்படப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் கொண்ட காட்சிக்கூடம் அமைக்கப்பட்டது. காட்சிக்கூடத்தை 1200க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்.

### இலவச கால்நடைப் பிறப்புக் கட்டுப்பாடு முகாம்

பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு, கல்லூரியின் கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறை மூலம் இலவச கால்நடைப் பிறப்புக் கட்டுப்பாடு முகாம் 04.08.2014அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். 10 பெண் நாய்கள், 9 ஆண்

நாய்கள் மற்றும் ஒரு பெண் பூனை உட்பட மொத்தம் 20 கால்நடைகளுக்குப் பிறப்புக் காட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. கால்நடைப் பிறப்புக் காட்டுப்பாடு குறித்த மடிப்பிதழ்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கதழ்ஒலி ஆய்வில் உயர்த்தொழில்நுட்பப் பயிற்சி



கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறையில் பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புச் துறைசார்ந்த 10 களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்கு “கதழ்ஒலி ஆய்வில் உயர்த்தொழில்நுட்பப் பயிற்சி” இரு பிரிவாக, 04.08.2014–08.08.2014, 18.08.2014–22.8.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பயிற்சி முடித்தவர்களுக்குக் கதழ்ஒலி நுட்பங்கள் தொடர்பான சான்றிதழுடன் கூடிய பயிற்சியேடு, குறுந்தகடு ஆகியவற்றை வழங்கினார்.

### செல்லப் பிராணிகளில் அடிப்படைக் கதழ்ஒலி ஆய்வுப் பயிற்சி

கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறைமூலம் நாமக்கல், மார்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் உதவியுடன் “செல்லப் பிராணிகளில் அடிப்படைக் கதழ்ஒலி ஆய்வுப் பயிற்சி” தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவைச் சார்ந்த 8 களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்கு 25.08.2014 முதல் 27.08. 2014 வரை வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

★ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தூத்துக்குடி மாவட்டத்தின் மகளிர் திட்டமும் இணைந்து “கறவை மாடு வளர்ப்பு”



பயிற்சியைத் தூத்துக்குடி மாவட்டம், அய்யனார்குளம்பட்டி கிராமத்தில் 12.08.2014அன்று நடத்தின. இதில் 25 மகளிர் பொது வாழ்வாதாரக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

★ திருநெல்வேலி மாவட்டத்தின் புதுவாழ்வுத் திட்டத்துடன் இணைந்து “பால் பொருட்கள் தயாரிப்பு” குறித்த பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம் 21.08.2014அன்று வாசுதேவநல்லூர் கிராமத்தில் 40 பொது வாழ்வாதாரக் குழு உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்டது.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### வெறிநோய்த் தடுப்பூசி மற்றும் விழிப்புணர்வு முகாம்



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 26.08.2014 அன்று இலவச வெறிநோய்த் தடுப்பூசி மற்றும் விழிப்புணர்வு முகாமைத் தஞ்சாவூர், கால்நடைப் பெருமருத்துவமனையில் நடத்தியது. இம்முகாமிற்கு இண்டியன் இம்மியுனலாஜிக்கல்ஸ், ஹைதராபாத், இன்டர்வெட் இந்தியா விலங்கு வதைத் தடுப்புச் சங்கம், தஞ்சாவூர் மற்றும் இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர் ஆகியவை உதவி புரிந்தன. முகாமைத் தஞ்சை மாவட்ட ஆட்சியர் டாக்டர் ந. சுப்பையன் அவர்கள் தொடங்கி வைத்தார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக்

கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ.) டாக்டர் பி.ஜி. சங்கரநாராயணன், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் ஆர். செல்வவிநாயகம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் டாக்டர் டி.எஸ். வரதராஜன் மற்றும் முதன்மை மேலாளர் டாக்டர் ஆர். ராஜா ருக்மாங்கதன், தஞ்சாவூர் இந்திய விலங்கு வதைத் தடுப்புச் சங்கத்தின் செயலாளர் திரு. எஸ்.ஆர்.டி. சாமியப்பன், கால்நடைப் பராமரிப்பின் உதவி இயக்குநர் டாக்டர் வி. திருப்பதி ஆகியோர் பங்கேற்றனர். முகாமில் மொத்தம் 133 நாய்களுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது மற்றும் வெறிநோய் குறித்த மடிப்பிதழ்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

## விரிவாக்கப் பணி

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஜப்பானியக் காடை வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, பசுந்தீவனம் மற்றும் பசுந்தீவன விதை உற்பத்தி, பால்பண்ணை உதவியாளர், தீவன ஆலை மேற்பார்வையாளர் ஆகிய செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு கோயம்புத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் மற்றும் மதுரை கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி–மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையம், மாதவரம் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் கோழியின ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் ஆகஸ்டு 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 52பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

### தொலைநிலைக் கல்விச் சான்றிதழ்ப் படிப்பின் நேரடிப் பயிற்சி வகுப்பு

பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் "நாட்டுக்கோழி வளர்ப்பு" குறித்த தொலை நிலைக் கல்விச் சான்றிதழ்ப் பயிற்சிக்கான நேரடிப் பயிற்சி வகுப்பு 06.08.2014 மற்றும் 07.08.2014ஆம் தேதிகளில் நடைபெற்றது. பயிற்சியில் மொத்தம் 23 பேர் பங்கேற்றுப் பயிற்சியைச் சிறப்பாக நிறைவு செய்தனர்.

மேலும், "வெள்ளாடு வளர்ப்பு" குறித்த தொலைநிலைக் கல்விச் சான்றிதழ்ப் பயிற்சிக்கான நேரடிப் பயிற்சி வகுப்பு



12.08.2014 மற்றும் 13.08.2014ஆம் தேதிகளில் நடைபெற்றது. பயிற்சியில் 22 பேர் பங்கேற்றுப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தனர். 13.08.2014அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் பங்கேற்று, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் நலன் கருதித் தொலைநிலைக் கல்வி இயக்ககம் நடத்திவரும் பல்வேறு பயிற்சிகள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினார். கால்நடை நலக் கல்வி மையத்தின் முன்னாள் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின் வணிக மேம்பாடு மற்றும் கூட்டுணைவு வல்லுநர் முனைவர் வே. புருஷோத்தமன் அவர்கள் நிறைவுரையாற்றி, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். முன்னதாக, பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். சுரேஷ் சுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சி முடிவில் இணைப் பேராசிரியர் முனைவர் அ. மணிவண்ணன் நன்றியுரை ஆற்றினார்.

### புதுக்கோட்டை, பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையப் பணி

புதுக்கோட்டை, பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையமானது கிரின்கோ் தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து ஆத்மா திட்டத்தின்கீழ் "மதிப்பூட்டிய பால் பொருட்கள் தயாரிப்பு" – பண்ணைப் பள்ளிப் பயிற்சி வகுப்பினை 18.08.2014அன்று நடத்தியது. பயிற்சியைப் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. சி. மனோகரன் இ.ஆ.ப அவர்கள் துவக்கிவைத்துப் பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார். இதில் 25 பயிற்சியாளர்கள் பங்கேற்றுப் பயன் பெற்றனர்.

### காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையப் பணி

- புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்விற்காகவும், அவற்றைக் கண்டுணரும் வகையிலும் கல்விப் பயணம் 06.08.2014 முதல்



12.08.2014வரை ஆத்மா திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 30 முன்னோடி விவசாயிகள் இதில் பங்கேற்று, கர்நாடகம் மற்றும் கோவா மாநிலங்களில் உள்ள பல்வேறு நிலையங்களைப் பார்வையிட்டனர். குறிப்பாக ஹர்கட்டாவில் உள்ள மாநில அளவிலான கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பயிற்சி மையம், பசுந்தீவன விதை உற்பத்தி மையம், மத்திய கோழியினச் செயல்விளக்கப் பிரிவுகள், பெங்களூரில் உள்ள இந்தியத் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தேவாங்கெரே வேளாண் ஆராய்ச்சி நிலையம், தார்வார்டு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கோவாவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக வளாகம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

- இந்நிலையம்மூலம் 21.08.2014அன்று ராபி பருவம்–2014இல் “கலப்பினக் கத்தரியில் ஒருங்கிணைந்த பயிர்ப் பராமரிப்பு” குறித்த உழவர் வயல்வெளிப் பள்ளி, காஞ்சிபுரம் மாவட்டம் கம்சலாபுரத்தில் நடத்தப்பட்டது. மொத்தம் 30 காய்கறிப் பண்ணையாளர்கள் இதில் பங்கேற்றனர்.

### கருத்தரங்கு மற்றும் பயிற்சி

காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையம்மூலம் “பண்ணை வருவாய்ப் பெருக்கத்திற்கு வேளாண் நிலத்தில் மரச் சாகுபடி” குறித்த ஒரு நாள் சிறப்புக் கருத்தரங்கு மற்றும் பயிற்சி 27.08.2014அன்று நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மொத்தம் 75 பண்ணையாளர், பண்ணை மகளிர், கிராம இளைஞர்கள் மற்றும் பள்ளிச் சிறார்கள் இதில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### பல்கலைக்கழகப் பயிற்சி மையங்களின் பணி

- கிருஷ்ணகிரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கோழிவளர்ப்பு மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி 22.08.2014அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று,



தீவனச் செலவைக் குறைத்து இலாபகரமான விற்னை வாய்ப்பு பற்றி விளக்கியதுடன், 5000 அலகுகள் கொண்ட இராணிக்கெட் நோய்க்கான வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்தை அவர்களுக்கு வழங்கினார். பயிற்சியில் 35 பயனாளிகள் பங்கேற்றனர். மேலும், “ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணையம்” மற்றும் “நாட்டுக்கோழி வளர்ப்பு” குறித்த பயிற்சிகள் நடத்தப்பட்டன. இவற்றில் 113 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். இரு கறவைமாட்டுப் பண்ணைகளில் அசோலா உற்பத்தி பற்றிய செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கரூர் மற்றும் தாந்தோணி வட்டார ஆத்மா திட்டத்தின் கீழ் ஜனவரி 2014இலிருந்து நடத்திய “கறவை மாடுகளுக்கேற்ற தீவனப் பராமரிப்பு முறைகள்” பண்ணைப் பள்ளியின் நிறைவு விழா 06.08.2014 மற்றும் 21.08.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது.



விழாவில் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள் மற்றும் இடுபொருட்களாகக் கறவை மாடு வளர்ப்புப் புத்தகம், கோ.எப்.எஸ். 29 தீவனச் சோள விதைகள், தனுவாஸ் தாதுஉப்புக்கலவை ஆகியவை வழங்கப்பட்டன.

- மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் புதுவாழ்வுத் திட்டத்தின் ஆடு வளர்ப்புப் பயனாளிகளுக்கு “ஆடு வளர்ப்பு” பயிற்சி இரு தொகுதியாக 25.08.2014 – 26.08.2014 மற்றும் 27.08.2014 – 28.08.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. முன்னாள் கால்நடை நலக்

கல்வி மைய இயக்குநர் மற்றும் தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின் வணிக மேம்பாடு மற்றும் கூட்டுணைவு வல்லுநர் முனைவர் வே. புருஷோத்தமன் அவர்கள் 25.08.2014அன்று பயிற்சியைத் துவக்கிவைத்து, ஆடு வளர்ப்புக் கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். மொத்தம் 60 பயனாளிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## நாட்டுநலப் பணித் திட்டச் செயல்பாடுகள்

★ கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் செஞ்சுருள் சங்கம் 07.08.2014அன்று கல்லூரியில் துவக்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்ட எயிட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் மேற்பார்வையாளர் திருமதி. ஜெனிபர், ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும்




சோதனை மையத்தின் (ICTC- செங்குன்றம்) ஆலோசகர் திருமதி. குர்ஷித் ஆகியோர் பங்கேற்றனர். எயிட்ஸ் விழிப்புணர்வு மற்றும் பாலியல் கல்வி பற்றிச் செஞ்சுருள் சங்கத் தன்னார்வ மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

★ சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் 11.08.2014அன்று செஞ்சுருள் சங்கம் துவக்கப்பட்டது. சங்கத்தைக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் துவக்கிவைத்தார். சென்னை மாவட்டச் செஞ்சுருள் சங்க மேற்பார்வையாளர் திரு. கதிரவன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரியின் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர்கள் 150 பேர் பங்கேற்றனர்.

★ நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் செஞ்சுருள் சங்கத்தின் 30 மாணவத் தன்னார்வலர்கள் 27.08.2014 அன்று நாமக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அமைந்துள்ள இரத்த



சேமிப்பு வங்கி மற்றும் எய்ட்ஸ் நோய்ச் சிகிச்சைக்கான சிறப்பு மையத்தைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வின் மூலம் இரத்த தானத்தின் முக்கியத்துவத்தையும், எய்ட்ஸ் நோய்க்கு அளிக்கப்படும் சிறப்புச் சிகிச்சைகள் பற்றியும் விவரமாகக் கேட்டறிந்தனர்.

## பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள பல்கலைக்கழகச் சிகிச்சையியல் மையத்தின் உதவியாளர் (தேநி) திருமதி ஏ.கே. அக்பரினிஷா அவர்கள் 31.08.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 09.08.1956இல் பிறந்த இவர், 19 ஆண்டும் 04 மாதமும் பணிபுரிந்துள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலைப் பட்ட ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர் திரு. கே. ராஜன் அவர்கள் 31.08.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 27.08.1954இல் பிறந்த இவர், 17 ஆண்டும் 05 மாதமும் பணிபுரிந்துள்ளார்.

## இரங்கல்



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்க் குறியியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ்.எம். சக்திவேலன் அவர்கள் 09.09.2014 அன்று இயற்கை எய்தினார். அவரை இழந்துவாடும் குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு, பல்கலைக்கழகப் பணியாளர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

பிறந்த தேதி : 13.04.1972

பணியில் சேர்ந்த தேதி : 21.07.1999

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்தி மடல் – செப்டம்பர் – 2014

Posted on 23.09.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.09.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

## தானுவாஸ் முன்னாள் மாணவர் சங்க நினைவுக் கட்டடத்திற்கான நன்கொடை வழங்கியோர்

| வ.எண். | | பெயர் | ₹ |
|---|---|---|---|
| 1. | மரு. | அப்ரஹாம் மாணிக்கராஜன், D | 2000 |
| 2. | மரு. | அகிலா, N | 3233 |
| 3. | மரு. | ஆனந்த சித்ரா, M | 2050 |
| 4. | மரு. | ஆனந்தன், R | 5000 |
| 5. | மரு. | அனில் குமார், R | 3760 |
| 6. | மரு. | அனிதா, A | 1500 |
| 7. | மரு. | அண்ணாஆனந்த், A | 2050 |
| 8. | மரு. | அண்ணல்வில்லி, R | 3500 |
| 9. | மரு. | அருள் ஜோதி, A | 2000 |
| 10. | மரு. | ஆறுமுகம், R | 3000 |
| 11. | மரு. | அருணாசலம், S | 5000 |
| 12. | மரு. | அருண் குமார், S | 3130 |
| 13. | மரு. | அய்யப்பன், K | 1700 |
| 14. | மரு. | அய்யாவு பிரேம்நாத் மனோகரன் | 3225 |
| 15. | மரு.. | பாபு பிரசாத், N | 1485 |
| 16. | மரு. | பால முருகன், T.C | 1750 |
| 17. | மரு. | பாலகிருஷ்ணன், G | 3130 |
| 18. | மரு. | பாலசுப்பரமணியம், D | 4120 |
| 19. | மரு. | பாலசுந்தரம், B | 1485 |
| 20. | மரு. | பந்தேஸ்வரன், C | 3325 |
| 21. | மரு. | பஷீர் அகமத், D | 3130 |
| 22. | மரு. | பத்மபால்ராஜ் | 2000 |
| 23. | மரு. | பாரதி, N | 1578 |
| 24. | மரு. | பூபதி, B | 1615 |
| 25. | மரு. | சந்திரகாசன், C | 5451 |
| 26. | மரு. | தேவேந்திரன், P | 3600 |
| 27. | மரு. | தேவி, T | 1485 |
| 28. | மரு. | துரை ராஜன், R | 1500 |
| 29. | மரு. | கணேஷ கலே, D | 5000 |
| 30. | மரு. | கணேஷ். R | 5000 |
| 31. | மரு. | கணே வெங்கட சுதாகர் ராவ் | 4029 |
| 32. | மரு. | குணசேகரன், S | 1745 |
| 33. | மரு. | குரு D.V. பாண்டியன் | 1485 |
| 34. | மரு. | அய்யு, M | 4950 |
| 35. | மரு. | ஜெயச்சந்திரன்,S | 3225 |
| 36. | மரு. | ஜெயலலிதா, V | 1750 |
| 37. | மரு. | ஜெயசுந்தர். S | 1000 |
| 38. | மரு. | ஜெயதங்கராஜ், M.G | 4285 |
| 39. | மரு. | ஜெயசீலன் செல்லப்பா | 2000 |
| 40. | மரு. | ஜெயதிலகன், N | 3570 |

| வ.எண். | | பெயர் | ₹ |
|---|---|---|---|
| 41. | மரு. | ஜோசப், S.A | 2000 |
| 42. | மரு. | ஜோதி பிரியா, R | 1500 |
| 43. | மரு. | கருபசுபதி | 2325 |
| 44. | மரு. | கதிர்செல்வன், M | 3430 |
| 45. | மரு. | கதிர்வேல், S | 3200 |
| 46. | மரு. | கவிதா, N.V. | 1578 |
| 47. | மரு. | கிருஷ்ணமூர்த்தி, J.V | 10000 |
| 48. | மரு. | லலிதா, P.S | 50000 |
| 49. | மரு. | லூர்து ரீடா, T | 2305 |
| 50. | மரு. | மணியம், K.S | $300 |
| 51. | மரு. | முகமது சபியுல்லா, A | 4030 |
| 52. | மரு. | முருகேசன், S | 4297 |
| 53. | மரு. | முருகேஸ்வரி, R | 1745 |
| 54. | மரு. | முத்துசாமி, N | 1530 |
| 55. | மரு. | நாமகிரி லஷ்மி, S | 1615 |
| 56. | மரு. | நடராஜன், N | 10000 |
| 57. | மரு. | நிஷா, P.R | 3130 |
| 58. | மரு. | நிஷாந்த், B | 1490 |
| 59. | மரு. | நித்திய செல்வி, R | 1485 |
| 60. | மரு. | பத்மநாபன், C | 10000 |
| 61. | மரு. | பத்மநாபன், P.N | 2001 |
| 62. | மரு. | பழனிவேல் ராஜன், M | 3245 |
| 63. | மரு. | பரமசிவம், S | 3130 |
| 64. | மரு. | பட்டாபிராமன், S.R | 5000 |
| 65. | மரு. | பொன்னுசாமி, P | 1485 |
| 66. | மரு. | பிரபு | 1590 |
| 67. | மரு. | பிரதிபா, A | 1555 |
| 68. | மரு. | பிரேமா, N | 2440 |
| 69. | மரு. | பிரேமலதா, N | 3237 |
| 70. | மரு. | புண்ணிய மூர்த்தி, N | 5000 |
| 71. | மரு. | புஸ்கின் ராஜ், H | 1700 |
| 72. | மரு. | பூவராஜன், B | 2170 |
| 73. | மரு. | ராஜ் குமார், R | 1533 |
| 74. | மரு. | ராஜ் குமார், R | 1700 |
| 75. | மரு. | ராஜராஜன், G | 1735 |
| 76. | மரு. | ராஜவேலு, G | 10000 |
| 77. | மரு. | ராஜேஷ் குமார், B | 2118 |
| 78. | மரு. | ராமசந்திரன், M | 3250 |
| 79. | மரு. | ரமேஷ், A | 3570 |
| 80. | மரு. | ரங்கநாதன், V | 3130 |
| 81. | மரு. | ரஞ்சித் குமார், M | 1700 |
| 82. | மரு. | ரவி, P | 1850 |
| 83. | செல்வி | ரேணுகா தேவி, M | 1485 |

| வ.எண். | | பெயர் | ₹ |
|---|---|---|---|
| 84. | மரு. | ரிட்சர்ட் சர்ச்சில், P | 3570 |
| 85. | மரு. | சக்திவேல், P C | 1860 |
| 86. | மரு. | சங்கிலிமாடன், K | 3225 |
| 87. | மரு. | சங்கர், P | 1650 |
| 88. | மரு. | சரஸ்வதி, S | 2245 |
| 89. | மரு. | சரவணன், K.P. | 1530 |
| 90. | மரு. | சரவணன், M | 1700 |
| 91. | மரு. | சசிகலா, M | 1485 |
| 92. | மரு. | சசிகலா, V | 1705 |
| 93. | மரு. | சதீஷ் குமார், S | 3130 |
| 94. | மரு. | சத்தியமூர்த்தி, O.R | 3570 |
| 95. | மரு. | செல்வ ரமேஷ், A.S | 1750 |
| 96. | மரு. | செல்வராஜ், J | 3570 |
| 97. | மரு. | செந்தில் குமார், A | 3000 |
| 98. | மரு. | செந்தில் குமார், D | 1530 |
| 99. | மரு. | செந்தில் குமார், G | 1720 |
| 100. | மரு. | செந்தில் குமார், K | 1665 |
| 101. | மரு. | செந்தில் குமார், P | 1480 |
| 102. | மரு. | செந்தில் குமார், T | 3317 |
| 103. | மரு. | சண்முக சுந்தரம், A | 1533 |
| 104. | மரு. | ஷெரீப், F.R | 10000 |
| 105. | மரு. | சிபி தாமஸ், K | 2020 |
| 106. | மரு. | ஷியாம் பாபு, A | 2799 |
| 107. | மரு. | ஷியாம் சங்கர், M | 5000 |
| 108. | மரு. | சிலம்பரசன், P | 1485 |
| 109. | மரு. | சிவஞானம், S | 1670 |
| 110. | மரு. | சிவகுமார், K | 3700 |
| 111. | மரு. | சிவகுமார், K | 4000 |
| 112. | மரு. | ஸ்ரீ பாலாஜி, N | 1485 |
| 113. | மரு. | ஸ்ரீனிவாசன், G | 1500 |
| 114. | மரு. | சுரேஷ் குமார், P | 2085 |
| 115. | மரு. | சுரேஷ், R | 1530 |
| 116. | மரு. | தமிழ்ம், T.V | 1485 |
| 117. | மரு. | தங்கவேல், A | 5000 |
| 118. | மரு. | தியாகராஜன், M | 10000 |
| 119. | மரு. | உஷா, S | 1750 |
| 120. | திரு. | பேராசிரியன் | 2375 |
| 121. | மரு. | வசந்தி, B | 1484 |
| 122. | மரு. | வீரபாண்டியன், C | 5000 |
| 123. | மரு. | வீரசெல்வம், M | 1545 |
| 124. | மரு. | யசோதை, R | 2180 |

தொடரும்...